பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

**23 04 2026 THURSDAY 6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்குப்பதிவு மாலை 6 மணியுடன் நிறைவடைந்தது.

2. வாக்குச்சாவடிக்கு மாலை 6 மணிக்குள் வந்தவர்களுக்கு டோக்கன் வழங்கப்பட்டு வாக்குரிமையை செலுத்த அனுமதிக்கப்படுகின்றனர்.

3. தமிழகத்தில் முன்எப்போதும் இல்லாத அளவில் மாலை ஐந்து மணி நிலவரப்படி, 82 புள்ளி இரண்டு நான்கு சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

4. கரூர் மாவட்டத்தில் அதிகபட்சமாக 89 புள்ளி மூன்று இரண்டு சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

5. Gwangju சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் — ஜப்பானின் Takeru Yuzuki இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

---- இனி விரிவான செய்திகள் —

<<<<<<<<>>>>>>>>

தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்குப்பதிவு மாலை 6 மணியுடன் நிறைவடைந்தது.

தமிழகத்தில் முன்எப்போதும் இல்லாத அளவில் மாலை ஐந்து மணி நிலவரப்படி, 82 புள்ளி இரண்டு நான்கு சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

அதிகபட்சமாக, கரூர் மாவட்டத்தில் 89 புள்ளி மூன்று இரண்டு சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

தமிழகத்தில் வாக்குப்பதிவு நிலவரம் குறித்து எமது செய்தியாளர் ஜாய் தரும் தகவல்.

***(Voice Over - ஜாய் — 84 Sec. )***

மாவட்டங்கள் வாரியாக வாக்குகள் பதிவான விவரங்களும் வெளியாகியுள்ளன.

இதன்படி, அரியலூர் மாவட்டத்தில் 83 புள்ளி 0 9 சதவீதமும்,

செங்கல்பட்டு மாவட்டத்தில் 82 புள்ளி 4 1 சதவீதமும்,

சென்னை மாவட்டத்தில் 81 புள்ளி 3 4 சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

கோவையில் **82** புள்ளி **3 3** சதவீதமும்,

கடலூரில் **81** புள்ளி **9 1** சதவீத வாக்குகளும்,

தருமபுரியில் **87** புள்ளி **2 8** சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

திண்டுக்கல்லில் **86** புள்ளி **3 5** சதவீதமும்,

ஈரோட்டில் **87** புள்ளி **5 9** சதவீத வாக்குகளும்

கள்ளக்குறிச்சியில் **84** புள்ளி **2 2** சதவீத வாக்குகளும்,

காஞ்சிரபுரத்தில் **84** புள்ளி **9 2** சதவீதமும்,

கன்னியாகுமரியில் **73** புள்ளி **4 4** வாக்குகளும்,

கிருஷ்ணகிரியில் **82** புள்ளி **4** சதவீதமும்,

மதுரையில் **77** புள்ளி **8 9** சதவீதமும்,

மயிலாடுதுறையில் **78** புள்ளி **4 1** சதவீதமும்,

நாகையில் **83** புள்ளி **1 5** சதவீதமும்,

நாமக்கல் மாவட்டத்தில் **87** புள்ளி **6 3** சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

பெரம்பலூரில் **82** புள்ளி **7 5** சதவீதமும்,

புதுக்கோட்டையில் **81** புள்ளி **5 5** சதவீதமும்,

ராமநாதபுரத்தில் **74** புள்ளி **4 1** சதவீதமும் பதிவாகியுள்ளன.

ராணிப்பேட்டையில் **86** புள்ளி **2 8** சதவீதமும்,

சேலத்தில் **88** புள்ளி **0 2** சதவீதமும்,

சிவகங்கையில் **74** புள்ளி **4 4** சதவீதமும்

தென்காசியில் **79** புள்ளி **2 8** சதவீதமும்,

தஞ்சாவூரில் **78** புள்ளி **0 7** சதவீதமும்,

நீலகிரியில் **75** புள்ளி **9** சதவீதமும்,

தேனியில் **78** புள்ளி **7 3** சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

திருவள்ளூரில் **80** புள்ளி **7** சதவீதமும்,

திருவாரூரில் **80** புள்ளி **6 5** சதவீதமும்,

தூத்துக்குடியில் **77** புள்ளி **5 6** சதவீதமும்,

திருச்சியில் **82** புள்ளி **7 6** சதவீத வாக்குகளும்

திருநெல்வேலியில் **75** புள்ளி ஒரு சதவீதமும்,

திருப்பத்தூரில் **85** புள்ளி **2 8** சதவீதமும்,

திருப்பூர் **86** புள்ளி **3 3** சதவீதமும்,

திருவண்ணாமலையில் **85** புள்ளி **5 9** சதவீதமும் பதிவாகியுள்ளன.

வேலூரில் **85** புள்ளி **0 6** சதவீதமும்,

விழுப்புரத்தில் **85** புள்ளி **4 5** சதவீதமும்,

விருதுநகரில் **82** புள்ளி **1 6** சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

இந்த தேர்தலில் ஆர்வத்துடன் பங்கேற்ற பெரம்பலூரை சேர்ந்த முதல்முறை வாக்காளர் ஜனநாயக கடமையை நிறைவேற்றியது பெருமிதம் அளிப்பதாக உள்ளது என்று எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் — வாக்காளர் - 33 செகண்ட்ஸ்)*

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்காளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் மகளிர் மட்டும் உள்ள பிங்க் வாக்குச்சாவடிகளும், சுற்றுச்சூழல் தூய்மை விழிப்புணர்வை ஏற்படுத்தும் பசுமை வாக்குச்சாவடிகளும் அமைக்கப்பட்டிருந்தது மக்களிடையே வரவேற்பை பெற்றது.

வேலூர் மாவட்டம் குடியாத்தம் நகராட்சி பள்ளியில் வாக்குச்சாவடி வாசலில் புடவை அணிந்த பெண் ரோபோ, கையில்

ரோஜா பூங்கொத்துடன் வாக்காளர்களை வரவேற்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Over —மோகன் - 73 Sec. )**

பக்ரைனில் பணியாற்றிவரும் அரியலூரை சேர்ந்த வாக்காளர் ஒருவர், மேற்காசியாவில் போர் சூழல் நிலவிவரும் சூழ்நிலையிலும் விமானம் மூலம் அரியலூர் வந்து தமது வாக்கினை செலுத்தியதாக எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Sound Byte — வாக்காளர் — 26 Sec. )***

மாலை 6 மணிக்குள் வாக்குச்சாவடிகளுக்கு வந்தவர்களுக்கு டோக்கன் வழங்கப்பட்டது.

டோக்கன் பெற்ற அனைவரும் தங்களது வாக்குரிமையை செலுத்த அனுமதிக்கப்படுவர் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

மாலை ஆறு மணிக்கு வரிசையில் வாக்காளர்கள் இல்லாத சூழ்நிலையில் உள்ள வாக்குச்சாவடிகளில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் வி வி பேட் கருவிக்கு சீல் வைக்கும் பணி வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் அடுத்த மாதம் 4-ஆம் தேதி எண்ணப்படுகின்றன.

<<<<<<<<>>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

தென்கொரியாவின் **Gwangju**-வில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் — ஜப்பானின் **Takeru Yuzuki** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை **7-6, 6-4** என்ற செட் கணக்கில், இந்தியாவின் ரித்விக் — அர்ஜூன் கதே இணையை வென்றது.

இப்போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - ஜெர்மனியின் **Daniel Masur**, இந்தியாவின் நிக்கி கலியாண்டா - தாய்லாந்தின் **Pruchya Isaro** இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளன.

---------------

பானிபட்டில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேசி சௌத்ரி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், **6-0, 6-4** என்ற செட் கணக்கில், **Harshini Nagaraj**-ஐ வென்றார்.

இப்போட்டியில் இந்தயாவின் **Akansha Ghosh, Akanksha Dileep, Shruti Ahlawat** ஆகியோரும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

----------------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் சென்னை — மும்பை அணியை எதிர்கொள்கிறது.

மும்பையில் இப்போட்டி இரவு மணி **7.30**-க்கு தொடங்குகிறது.

-------------------

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில், கேரளா இன்று ஒடிஷா அணியை எதிர்கொள்கிறது.

கொச்சியில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி **7.30**-க்கு தொடங்குகிறது.

**<<<<<<<<<END>>>>>>>>**